ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2022/30 - 2017 ජූනි මස 09 වැනි සිකුරාදා - 2017.06.09
*2022/30 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் மேற்குறித்த கட்டளையின் II ஆம் அட்டவணையின் விடய இலக்கம் 1 (இ) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையினை, இதனகத்துப் பின்னர் உள்ளவாரான பின்வரும் அட்டவணையைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.*

*இக்கட்டளையானது, 2017, யூன் 10 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, யூன் 07.*

**அட்டவணை**

| விவரம் | | உற்பத்தித் தீர்வை |
|---|---|---|
| 2016.07.14 ஆந் திகதிய வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2016 மற்றும் அல்லது அதனோடு தொடர்புபற்ற ஏனைய திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி, அரச உத்தியோகத்தர் ஒருவரினால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன கொள்வனவின் கிரயம், காப்புறுதி, கேள்வு பெறுமதியானது | | |
| (i) | ஐ. அ. டொ. 25,000 இற்கு மேற்படாவிடின் | செலுத்த வேண்டியுள்ள உற்பத்தித் தீர்வையின் 35% |
| (ii) | ஐ. அ. டொ. 25,000 இற்கு மேற்பட்டு ஐ. அ. டொ. 30,000 இற்கு மேற்படாவிடின் | செலுத்த வேண்டியுள்ள உற்பத்தித் தீர்வையின் 40% |

*06 - 879*

1A - PG 3559 — 557 (2017/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*